வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாம்பசிவம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | முத்து | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 31 |

தேதி 21.11.2024

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

**நான் மாதவரத்தில் குடியிருந்து** வருகிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2017 ஆண்டு ஜுலை மாதம் 5ம் தேதி செல்வம் நகர் அருகே காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரியை சர்வலிங்கம் என்பவரிடம் சீட்டு கட்டுவது தொடர்பாக அழைத்து கைது செய்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி வாக்குமூலம் பதிவு செய்தத்ற்கு என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துகொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

என்னை சர்வலிங்கத்தை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் இருவரும் கம்பெனியில் வேலை பார்த்து வந்தோம். நான் வேறொரு வழக்கில் சாட்சியாக உள்ளேனா என்றால் அவரது மகன் கேஸில் சாட்சியாக உள்ளேன். நான் வீட்டிற்கு சீட்டு பணம் கொடுக்க செல்வேனா என்றால் கம்பெனியில் பணத்தை பெற்றுக்கொண்டு சீட்டு கொடுப்பார். ஏலத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. அதில் சீட்டு பணம் என எழுதியிருந்ததா என்றால் சீட்டு பணம் கொடுப்பதாகத்தான் சர்வலிங்கம் கூறுவார்.

நான் சர்வலிங்கத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எதிரி சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**